சார்பு நீதிமன்றம் மேட்டுப்பாளையம்

ஓ.எஸ்.எண்.313/2018

2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 09 ம் நாள் வா.சா.2 என்பவரது சாட்சிய வாக்குமூலம் (1873 ம் ஆண்டு 10 ஆவது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.தினேஷ்குமார், இளநிலை உதவியாளர், என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கந்தசாமி | வயது | 76 |
| த/பெ | முத்துச்சாமி | வட்டம் | மேட்டுப்பாளையம் |
| விலாசம் | மேட்டுப்பாளையம் | மாவட்டம் | கோவை |
| | | தொழில் | ஓய்வு பெற்ற அரசு ஊழியர் |

<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 5, 6 மற்றும் 8 பிரவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>

தாவா சொத்தின் முகவரி தெரியுமா என்றால் தாசாம் பாளையம் ரோட்டில் ஒரு மூலையில் உள்ளது. தாவா சொத்திற்கு போய் உள்ளேனா என்றால் போய் உள்ளேன். ஆதியில் ராமசாமி என்பவர் தான் தாவா சொத்தில் ஆக்கிரமிப்பு செய்து கடை நடத்தி வந்தார் என்றால் சரி தான். அதன் பிறகு அதன் பெயருக்கு பட்டா கொடுத்து விட்டார்கள். அவர் ஆக்கிரமிப்பு செய்த 5 செண்டு நிலத்தில் வாதியின் தகப்பானார் பெயருக்கு ஒரு பகுதிக்கு தான் பட்டா வழங்கப்பட்டது என்றால் சரி தான். 665 ச.அடிக்கு மட்டும் பட்டா வழங்கப்பட்டது. 665 ச.அடி தவிர மற்ற பகுதி அரசு புறம்போக்கு என்றால் சரி தான். அதில் வாதி ஆக்கிரமிப்பு செய்து உள்ளார். அரசு புறம்போக்கு நிலத்தை அனுபவத்தில் வந்தால் பி மெமோ செலுத்த வேண்டும் என்றால் தற்போது பி மெமோ கொடுப்பது இல்லை. அதை ரத்து செய்து விட்டார்கள். 2003-2004 ம் ஆண்டு வாக்கிலேயே பி மெமோ வழங்கும் வழக்கத்தை அரசு இரத்து செய்து விட்டது. அதற்கு முன்னர் தாவா சொத்திற்கு வாதியோ அவர்கள் தகப்பனாரோ பி மெமோ செலுத்தினார்களா என்றால் எனக்கு நினைவு

இல்லை. வாதியின் வீட்டிற்கு பின் பகுதியில் 2 அடி அகல சந்து உள்ளதா என்றால் உள்ளது. அந்த 2 அடி சந்து போக மேற்கொண்டு இருக்கும் இடத்தில் தான் தாவா என்றால் சரி தான். 65 அடி நீளத்தில் இறந்து போன 4 ம் பிரதிவாதி இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னரே காம்பவுண்டு சுவர் கட்டி விட்டார் என்றால் இல்லை. இரும்பு கேட் போட்டு இருந்தார் என்றால் வாதி போட்டு இருந்த மூங்கில் கதவினை தூக்கி விட்டு இரவோடு இரவாக மோகன் தாஸ் இரும்பு கேட் வைத்து விட்டார். பொதுவாக அரசு இடத்தில் யாராவது ஆக்கிரமிப்பு செய்து கேட் போட்டால் அதை அப்புறப்படுத்தி விடுவார்கள் என்றும் ஆனால் 4 ம் பிரதிவாதி போட்ட இரும்பு கேட் இன்னமும் அங்கேய உள்ளது என்றால் சரி தான். வாதிகள் அரசாங்க சொத்தை அபகரிப்பதற்கு முயற்சி செய்து அதற்காகத் தான் இந்த வழக்கை தாக்கல் செய்து உள்ளார் என்றால் சரி தான். தாவா சொத்தை பொறுத்து எனக்கு எந்த விவரமும் தெரியாது என்றும் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரி அல்ல. தாவா சொத்திற்கு முன் பக்கம் உள்ள கட்டிடத்திற்கு நான் தான் கட்டிட வரைபடம் வரைந்து கொடுத்தேன். என்னிடம் காட்டப்படுவது என்ன ஆவணம் என்றால் குத்தகை ரசீது. அந்த ரசீது யார் பெயரில் போடப்பட்டுள்ளது என்றால் மோகன்தாஸ் என்பவர் பெயரில் உள்ளது. அவரது அப்பா ராமச்சந்திரன் அப்போது வார்டு கவுன்சிலாராக இருந்ததால் அழுத்தம் கொடுத்து ரசீது போட வைத்துள்ளார். நான் சொல்வது போல 2003 – 2004 ம் ஆண்டு வாக்கில் பி மெமோ வழங்குவதை நிறுத்தி விட்டார்கள் என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றும் இறந்து போன 4 ம் பிரதிவாதி அவர் இருக்கும் வரை பி மெமோ செலுத்தி வந்தார் சரி அல்ல. அவர் பி மெமோ செலுத்தி வந்த இடத்தை வாதி ஆக்கிரமிப்பு செய்து இந்த வழக்கை தாக்கல் செய்து உள்ளார் என்றால் சரி அல்ல. அதனால் வழக்கு நிலைக்க தக்கது அல்ல என்றால் சரி அல்ல.

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது.

ஓம்/- கா. கெங்காராஜ்

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.